




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 150 | 4 Pages | 29.12.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 150 | 4 பக்கங்கள் | 29.12.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**உளவரை தூக்காத ஒப்புர வாண்மை**
**வளவரை வல்லைக் கெடும்**

**விளக்கம்:**
தனக்கு பொருள் உள்ள அளவை ஆராயாமல் மேற்கொள்ளும் ஒப்புரவினால், ஒருவனுடைய செல்வத்தின் அளவு விரைவில் கெடும்.

# மீனவர்கள் கைது; மத்திய வெளியுறவுத்துறை மந்திரிக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை,

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக இன்று (28.12.2025) இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், தமிழ்நாடு மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவதை தடுக்கவும், கைது செய்யப்பட்டுள்ளமீனவர்களையும்அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.



அக்கடிதத்தில் ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 27.12.2025 அன்று மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று மீனவர்களை அவர்களது மீன்பிடிப் படகுடன் இலங்கை கடற்படையினர் இன்று (28.12.2025) கைது செய்த மற்றொரு சம்பவத்தை வெளியுறவுத் துறை மந்திரியின் கவனத்திற்கு கொண்டு வருவதாக முதல்அமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக மீனவர்களும் அவர்களது மீன்பிடிப் படகுகளும் இலங்கை அதிகாரிகளால் சிறை பிடிக்கப்படுவது தங்கு தடையின்றி தொடர்ந்து நடைபெற்று வருவதாக கவலையுடன் குறிப்பிட்டுள்ள முதல்அமைச்சர், இக்கைது நடவடிக்கைகள் நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தற்போதையநிலவரப்படி,தமிழ்நாட்டைச் சேர்ந்த 248 மீன்பிடிப் படகுகளும், 61 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் காவலில் உள்ளதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே எதிர்காலத்தில் இது போன்ற கைது சம்பவங்கள் நிகழாமல் தடுக்கவும், இலங்கை காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவிக்கவும் உரிய தூதரக வழிகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதல் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விஜய்யின் அரசியல் பயணம் வெற்றி பெறட்டும்.. நமல் ராஜபக்சே வாழ்த்து



கொழும்பு, டிச.29

தவெக தலைவர் மற்றும் நடிகரான விஜய், தனது சினிமா கேரியருக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். வரும் ஜனவரி 09ஆம் தேதி வெளியாக உள்ள ‘ஜனநாயகன்’ படம்தான் தனது கடைசி படம் என விஜய் தெரிவித்துள்ளார். இந்த படத்தின் இசை வெளியீட்டு விழா நேற்று மலேசியாவில் நடைபெற்றது. தனது கடைசி படத்தின் இசை வெளியீட்டு விழா என்பதால், விஜய் நெகிழ்ச்சியுடன் உரையாற்றினார். விஜய் தனது சினிமா பயணத்தை முடித்துக்கொண்டு அரசியலில் முழு மூச்சுடன் கால்பதித்துள்ளதால், அவருக்கு பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில், இலங்கை முன்னாள் அதிபர் ராஜபக்சேவின் மகன் நமல் ராஜபக்சேவும் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது: “திரைத்துறையில் விஜய்யின் ஆற்றலை அனைவரும் அறிவோம். சினிமா பயணத்திற்கு முடிவுரை எழுதி, புதிய பயணத்தைத் தொடங்கியுள்ளார் விஜய். சினிமா அவரை மிகவும் மிஸ் செய்யும். எதிர்வரும் பயணத்தில் விஜய் வெற்றி பெற வாழ்த்துகள்” என்று அவர் பதிவிட்டுள்ளார்.

## தேனி: இரண்டு நாட்களுக்கு முன் ஆட்டுக்குட்டியை இழந்த மூதாட்டியின் குமுறல்... தேனியில் உலா வரும் சிறுத்தைக்கு ‘கேட்டு இருக்கு போல ஐந்துக்கும் மேற்பட்ட நாய்களை கடித்து கொன்ற சிறுத்தை

பெரியகுளம் அருகே கைலாசபட்டி மலை அடிவாரத்தில் கடந்த ஜூன் முதல் சிறுத்தை ஒன்று தோட்டங்களில் வளர்க்கப்படும் ஆடுகள், கன்றுகுட்டிகள், நாய்கள் என 20க்கும் மேற்பட்ட கால்நடைகளை கடித்துக் கொன்றது. நவ.மாதம் மானை சிறுத்தை வேட்டையாடியது.

இந்நிலையில் ஒரே நாளில் தோட்டங்களில் காவல் பணிக்காக இருந்த ஐந்து நாய்களை சிறுத்தை கடித்து கொன்றது.

சிறுத்தையை பிடிக்க வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்

## விண்வெளியில் பாலூட்டிகளின் இனப் பெருக்கம் குறித்து ஆய்வு எலிகளை அனுப்பி சீன விஞ்ஞானிகள் சோதனை



பீஜிங், டிச.29

சீனா சமீபத்தில் தனது தியாங்காங் விண்வெளி நிலையத்திற்கு 4 எலிகளை (2 ஆண், 2 பெண்) அனுப்பியது. விண்வெளியில் பாலூட்டிகளின் இனப்பெருக்கம் குறித்து ஆய்வு செய்வதற்கு இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது. நுண்ஈர்ப்பு விசை மற்றும் அடைபட்ட சூழலில் ஏற்படும் உயிரியல் விளைவுகளை தெரிந்து கொள்வதே இதன் நோக்கமாக இருந்தது.

விண்வெளியில் 2 வாரங்கள் தங்கவைக்கப்பட்ட பின்னர் அந்த எலிகள் பாதுகாப்பாக பூமிக்கு கொண்டு வரப்பட்ட நிலையில், அவற்றில் ஒரு பெண் எலி 9 குட்டிகளை ஈன்றது. இது விண்வெளியில் பாலூட்டிகளின் இனப்பெருக்கத்தைப் புரிந்துகொள்ளும் சோதனையில் ஒரு மைல்கல்லாக அமைந்ததுடன், நீண்டகால மனித விண்வெளிப் பயணங்களுக்கு வழிவகுத்துள்ளது.

குட்டிகளை ஈன்ற எலி மிகவும் முன்னெச்சரிக்கையோடு நடந்து கொண்டதாகவும், குட்டிகளை பெற்றெடுக்க தனிமையான, மறைவான இடத்தை அந்த எலி தேர்ந்தெடுத்ததாகவும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். அந்த எலி ஈன்ற 9 குட்டிகளில் 6 குட்டிகள் உயிர் பிழைத்ததுள்ளன. அந்த குட்டிகள் அனைத்தும் நலமாக இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த சோதனை விண்வெளியில் மனிதர்களின் வாழ்வியல் தொடர்பான ஆராய்ச்சிக்கு பெரும் உதவியாக இருக்கும் என சீன விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## தாராபுரத்தில் ரூ.19.5 கோடி மதிப்பீட்டில் 650 பேருக்கு இலவச வீட்டுமனை பட்டா அமைச்சர்கள் சாமிநாதன் மற்றும் கயல்விழி ஆகியோர் வழங்கினர்.

தாராபுரம், திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் ரூ.19.5 கோடி மதிப்பீட்டில் 650 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை தமிழக அரசுசார்பில் அமைச்சர்கள் வழங்கினர்.




தாராபுரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் விழாவிற்கு வருவாய் கோட்டாட்சியர் (ஆர்டிஓ) பெலிக்ஸ் ராஜா தலைமை தாங்கினார்.

இந்த விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் கயல்விழி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கினர்.

விழாவில் பேசிய அமைச்சர் மு.பெ.சாமிநாதன், “தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, ஏழை மற்றும் எளிய மக்களுக்குசொந்தவீடுஎன்றகனவைநிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வீடு என்பது வெறும் கட்டிடம் மட்டுமல்ல. அது குடும்பத்திற்கு பாதுகாப்பு, மரியாதை மற்றும் எதிர்கால நம்பிக்கை ஆகும்” என்று தெரிவித்தார்.

மேலும் அவர், “பல ஆண்டுகளாக வீட்டு மனை இல்லாமல் வாடிய மக்களுக்கு, எந்த விதமான பேதமும் இன்றி இலவசமாக வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டு வருகிறது. அரசின் திட்டங்கள் உண்மையான பயனாளிகளை சென்றடைய வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கம். இந்த பட்டாக்கள் மூலம் பயனாளிகள் வீடு கட்டி, நல்ல வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்” என கூறினார்.

அதனை தொடர்ந்து, “தாராபுரம், கொளத்துப்பாளையம், ருத்ராவதி, சின்னக்காம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு இன்று வழங்கப்பட்டுள்ள பட்டாக்கள், அவர்களின் வாழ்க்கையில் புதிய தொடக்கமாக அமையும். அரசு மக்களுடன் உள்ளது. மக்கள் நலனே இந்த அரசின் அடையாளம்” என்று அமைச்சர் தெரிவித்தார்

இந்த விழாவில் திருப்பூர் மாநகராட்சி 4வது மண்டல குழு தலைவர் இல.பத்மநாபன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் தனசேகர், தாராபுரம் நகர செயலாளர் முருகானந்தம், நகராட்சி தலைவர் பொறியாளர் பாப்பு கண்ணன், தாசில்தார் ராமலிங்கம் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## அணுஉலை அமைக்க துருக்கிக்கு ரூ.80 ஆயிரம் கோடி வழங்கிய ரஷியா

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான துருக்கியில் மின்உற்பத்திக்காக இதுவரை அணுமின்நிலையம் ஒன்றும் அமைக்கப்படவில்லை.

இந்தநிலையில் நாட்டின் முதல் அணுமின்நிலையத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டது. அங்குள்ள மத்திய தரைக்கடல் அருகே மெர்சின் மாகாணத்தில் அக்யூவில் 2010ம் ஆண்டு முதல் கட்டுமானம் நடந்து வருகிறது. ரூ.1 லட்சத்து 80 ஆயிரம் கோடி (20 பில்லியன் டாலர்) மதிப்பில் கட்டப்பட்டு வரும் இந்த அணுஉலையின் கட்டுமானப்பணி ஏறக்குறைய முடிவடைந்ததாக அந்த நாட்டின் எரிசக்தித்துறை மந்திரி அல்பார்ஸ்லான் பய்ரக்தார் தெரிவித்தார். அடுத்த ஆண்டு (2026) முதல் பயன்பாட்டுக்கு வரவுள்ள இந்த அணுஉலையை அமைக்க ரஷியாவின் தேசிய அணுஆராய்ச்சி நிறுவனமான ‘ராசோடம்’ ரூ.80 ஆயிரம் கோடி (9 பில்லியன் டாலர்கள்) நிதியுதவி வழங்கியதாக தெரிவித்துள்ளார்.

மேலும் 2010 ஆம் ஆண்டு 20 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தின்படி, மத்தியதரைக் கடல் மாகாணமான மெர்சினில் உள்ள அக்குயுவில் துருக்கியின் முதல் அணுமின் நிலையத்தை ராசோடம் கட்டி வருகிறது. இந்த ஆலை இந்த ஆண்டு செயல்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் தாமதமாகிவிட்டது என்று அல்பார்ஸ்லான் பய்ரக்தார் தெரிவித்தார்.

## கூடலூரில் கனரா வங்கி ஏடிஎம் கொள்ளை முயற்சி - கூடலூர் வடக்கு காவல்துறையினர் தீவிர விசாரணை

தேனி மாவட்டம் கூடலூர் பகுதியில் உள்ள கனரா வங்கி ஏடிஎம் மையத்தில் இன்று மாலையில் கொள்ளை அடிக்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது . அடையாளம் தெரியாத நபர்கள் ஏடிஎம் இயந்திரத்தை சேதப்படுத்தி பணம் கொள்ளையடிக்க முயன்றதாக கூறப்படுகிறது . இதுகுறித்துதகவல்அறிந்த கூடலூர் வடக்கு காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ஆய்வு மேற்கொண்டனர் . ஏடிஎம் மையத்தில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்களின் காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்து வருகிறனர் . கொள்ளை முயற்சியில் ஈடுபட்டவர்கள் யார் என்பதையும், அவர்கள் எந்த வழியில் தப்பிச் சென்றனர் என்பதையும் கண்டறிய கூடலூர் வடக்கு போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் . சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை தொடர்கிறது .







### தி.மு.க. கூட்டணியில் 10 தொகுதிகள் வேண்டும்:

# சட்டமன்றத் தேர்தலில் தனிச்சின்னத்தில் ம.தி.மு.க. போட்டியிட வேண்டும்!

## வைகோவிடம் நிர்வாகிகள் வலியுறுத்தல்!!

சென்னை, டிச.29

தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க.வுக்கு 10 தொகுதிகள் வேண்டும் சட்டமன்ற தேர்தலில் தனிச்சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று வைகோவிடம் கட்சி நிர்வாகிகள் வலியுறுத்தியுள்ளனர்.

மதிமுக உயர்நிலைக் குழுக் கூட்டம் சென்னை எழும்பூரில் உள்ள மதிமுக தலைமைக் அலுவலகமான தாயகத்தில் நேற்று நடைபெற்றது. அவைத்தலைவர் ஆடிட்டர் ஆ. அர்ஜூனராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், பொதுச்செயலாளர் வைகோ, பொருளாளர் செந்திலதிபன், முதன்மைச் செயலாளர் துரை வைகோ, துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட உயர்நிலைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் ஏழு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழகத்தில்எஸ்.ஐ.ஆர் மூலம் 97.38 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ள நிலையில் தகுதியான வாக்காளர்கள் பெயர்கள் விடுபட்டிருந்தால், உடனடியாக படிவம் 6, 7, 8 ஆகியவற்றை நிரப்பி ஜனவரி 18க்குள் வழங்க வேண்டும், கூட்டணிக் கட்சித் தொண்டர்கள் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் பெயரிலிருந்து காந்தியின் பெயரை நீக்கியது கடும் கண்டனத்திற்குரியது. புதிய சட்டத்தை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்.

நாட்டின் பல மாநிலங்களில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களில் கிறிஸ்தவர்கள் மீது நடந்த தாக்குதல்களுக்கு கண்டனம். மதுரை திருப்பரங்குன்றம் பகுதியில் மத நல்லிணக்கத்தில் சீர்குலைக்க முயன்ற சக்திகளை முறியடித்த தமிழக அரசுக்கும், அமைதியை காத்த மக்களுக்கும் பாராட்டு. மத்திய அரசு கொண்டு வந்துள்ள விதை மசோதா 2025 விவசாயிகளின் உரிமைகளை பறிப்பதாகவும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சாதகமாகவும் உள்ளது. இந்த மசோதாவை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். 2026 சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள தேர்தல் நிதி திரட்டும் பணியைத் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி முதல் வாரம் முதல் வைகோ பங்கேற்கும் நிதியளிப்பு கூட்டங்கள் நடத்தப்படும் என்பன உள்ளிட்ட ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும் இந்த கூட்டத்தில், நிர்வாகிகள் பலரும் வரும் சட்டப்பேரவை தேர்தலில் திமுக கூட்டணியில் மதிமுகவுக்கு குறைந்தபட்சம் 10 தொகுதிகளை கேட்டு பெற வேண்டும்.

கடந்த தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட நிலையில் இம்முறை தனிச்சின்னத்தில் போட்டியிட வேண்டும் என நிர்வாகிகள் வைகோவிடம் வலியுறுத்தியுள்ளனர்.



சத்தியமங்கலம் நகர ஒன்றிய தே.மு.தி.க. கட்சி சார்பில் விஜயகாந்த் 2–ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரது படத்திற்கு சத்தி நகர பொறுப்பாளர் கண்ணன்தலைமையில்ஒன்றியசெயலாளர்சஜித்,நகரப்பொருளாளர்ஆறுமுகம், மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் சுசீலா ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

### மேற்கு வங்கத்தில்

# தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு ஒய்-பிளஸ் பாதுகாப்பு!

புதுடெல்லி, டிச. 29

மேற்கு வங்க தலைமைத் தேர்தல் அதிகாரிக்கான பாதுகாப்பை மத்திய அரசு அதிகரித்துள்ளது.

நாட்டின் பல மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்.ஐ.ஆர்.) நடைபெற்று வருகிறது. அதன்படி மேற்கு வங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி நடைபெற்று வருகிறது. இதற்கு ஆளும் திரிணாமுல் கட்சி எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

பணிச்சுமை காரணமாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் தற்கொலை செய்துகொள்வதாக முதல்வர் மம்தா குற்றம் சாட்டியிருந்தார்.

இந்நிலையில், அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி மனோஜ் அகர்வாலுக்கு அச்சுறுத்தல் இருப்பதாக மத்திய உளவு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதையடுத்து, அகர்வாலுக்கு ஒய்–பிளஸ் பாதுகாப்பு வழங்க மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த 26–ஆம் தேதி உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன்படி, சி.ஐ.எஸ்.எப். வி.ஐ.பி. பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஆயுதம் ஏந்திய 12 பேர் அகர்வாலின் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### செங்கல்பட்டு மாவட்டத்தில்

# 22 இடங்களில் பறவைகள் குறித்த கணக்கெடுப்பு!

## வனத்துறை அதிகாரி தகவல்!!

செங்கல்பட்டு, டிச.29

செங்கல்பட்டு மாவட்டத்தில் 22 இடங்களில் பறவைகள் குறித்த கணக்கெடுப்பு நடைபெற்றது. இதில் 84 வகையான பறவை இனங்களும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பறவைகளும் அடையாளம் காணப்பட்டது.

பறவைகள், சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் உயிரினமாகும். எனவே, பறவை இனத்தையும், அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாக்க, தமிழக அரசு மாநிலம் முழுவதும் 2,000–க்கும் மேற்பட்ட இடங்களில் (ஈர நிலங்கள் மற்றும் நிலப்பகுதிகள்) மிகப் பெரிய அளவில் ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பை 2023–ம் ஆண்டு முதல் தொடர்ந்து நடத்தி வருகிறது.

அதன்படி, வனத்துறை சார்பில், இந்த ஆண்டுக்கான ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பு டிச.27,28 ஆகிய 2 நாள்கள் நடைபெற்றன. செங்கல்பட்டு மாவட்டத்தில் 22 இடங்களில் நீர், நில பறவைகள்கணக்கெடுப்பு பணி நடைபெற்றது.

இதில் வனத்துறையினர் தன்னார்வ அமைப்பினர், கல்லூரி மாணவர்கள், தொழில் முறை புகைப்பட கலைஞர்கள் உள்ளிட்டபலர்கலந்துகொண்டனர். திருப்போரூர், செங்கல்பட்டு, மதுராந்தகம், செய்யூர் உள்ளிட்ட, 22 ஈர நில பகுதிகளில் பறவைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதில் 84 வகையான பறவை இனங்களும், 1,000–க்கும் மேற்பட்ட பறவைகளும் அடையாளம் காணப்பட்டது.

2–ம் கட்டமாக நிலப்பரப்புகளில் கணக்கெடுப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என, வனத்துறையினர் தெரிவித்தனர்.

# பொங்கல் பண்டிகையன்று நடக்கவிருந்த சி.ஏ. தேர்வு தள்ளிவைப்பு!

## ஜனவரி 19–ஆம் தேதி நடைபெறுகிறது!!

சென்னை, டிச. 29

பொங்கல் பண்டிகையன்று நடைபெறவிருந்த சி.ஏ. தேர்வு ஜனவரி 19–ஆம் தேதிக்கு தள்ளிவைக்கப்படுவதாக ஐ.சி.ஏ.ஐ. நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம் (ஐ.சி.ஏ.ஐ.) சார்பில் சி.ஏ. எனும்

பட்டயக் கணக்காளர் பணித்தேர்வு ஆண்டுதோறும் ஜனவரி, மே மற்றும்

செப்டம்பர் மாதங்களில் நடத்தப்படுகிறது. இத்தேர்வு அடிப்படை, இடைநிலை, இறுதி என 3 நிலைகளாக நடத்தப்படுகின்றன. அதில் தேர்ச்சி பெறுபவர்கள்

மட்டுமே ஆடிட்டராக முடியும். அந்த வகையில் 2026–ஆம் ஆண்டுக்கான சி.ஏ. தேர்வுகள் ஜனவரியில் நடைபெறவுள்ளன.

இதற்கிடையே இடைநிலை தேர்வில் குரூப்–2 பகுதியானது ஜனவரி 15–ஆம் தேதி நடத்தப்படும் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. அன்றைய தினம்

பொங்கல் பண்டிகை என்பதால், சி.ஏ. தேர்வு தேதியை மாற்ற வேண்டுமென கோரிக்கை எழுந்தது. இந்நிலையில் ஜனவரி 15–ல் நடைபெறுவதாக இருந்த சி.ஏ. தேர்வு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஐ.சி.ஏ.ஐ. நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பில், ''மகாராஷ்டிரா மாநிலத்தில் ஜனவரி 15–ஆம் தேதி நகராட்சித் தேர்தல் நடைபெற உள்ளது.

அதனால் அன்றைய தினம் நடைபெறுவதாக இருந்த சி.ஏ. தேர்வு, நாடு

முழுவதும் ஜனவரி 19–ஆம் தேதி நடத்தப்படும். தேர்வு நேரத்தில் எந்தவித

மாற்றமும் இல்லை. மற்ற தேர்வுகளும் திட்டமிட்டபடி நடைபெறும்'' என கூறப்பட்டுள்ளது. ஆனால் ஐ.சி.ஏ.ஐ. அறிவிப்பில் பொங்கல் பண்டிகை குறித்த தகவல் இடம்பெறாதது தமிழர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# வலதுசாரி அரசியலுக்கு தமிழகத்தில் இடமில்லை!

## திருமாவளவன் பேச்சு!!

மதுரை, டிச.29

வலதுசாரிஅரசியலுக்கு தமிழகத்தில்இடமில்லை என்று திருமாவளவன் கூறினார்.

மதுரை ஒத்தக்கடையில் நேற்று நடந்த விழா ஒன்றில் பங்கேற்று திருமாவளவன் பேசியதாவது: சாதி மறுப்பது, மறுமணம் செய்வது 50 ஆண்டுகளுக்கு முன்பு கடினமான செயலாக இருந்தது. இன்றைக்குப் பொது வெளியில் ஊர் அறிய சாதி மறுப்புத் திருமணங்கள் நடப்பது சமூக சூழலில் நெகிழ்வுத்தன்மையை ஏற்படுத்தி உள்ளது. இதுபோன்ற திருமணம் குறித்த சுவரொட்டிகளை ஒட்டுவதற்குகூட காவல் துறை அனுமதி மறுக்கிறது.

இன்றும் இதுபோன்ற திருமணங்களுக்கு எதிர்ப்பு இருக்கிறது. சாதிக்குள்ளேயே காதல் நிகழ வேண்டும். சாதி மாறி வரக் கூடாது என்ற நிலை இருந்தது. திருப்பரங்குன்றம் மலை விவகாரம் திட்டமிட்ட ஒன்று. பல ஆண்டாக திட்டமிட்டு வன்முறையை உருவாக்குகின்றனர்.மதத்தின் பெயரால் வன்முறை நடக்க வாய்ப்புள்ளது. இந்துக்களிடையே முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளை ஏற்படுத்தி பிரச்சினையைத் தூண்டிவிட முயற்சிக்கின்றனர். அது நடக்காததால் சாதிப் பெருமை பேசுகின்றனர். இதை ஒரு வேலைத் திட்டமாகவே இந்து சனாதன அமைப்புகள் செய்கின்றன.

சனாதன சக்திகள் தமிழ்நாட்டில் வேர்பிடிக்க அதிமுக உள்ளிட்ட கட்சிகளை பிடித்துள்ளன. வலதுசாரிகளை வீழ்த்த வேண்டும். இடதுசாரி அரசியல் வெற்றி பெற வேண்டும். வலதுசாரி அரசியலுக்கு தமிழகத்தில் இடமில்லை என, அவர்கள் பின்னங்கால்கள் பிடரியில்பட ஓடும்படி விரட்ட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

### மேல்மருவத்தூரில்

# விரைவு ரெயில் தற்காலிக நிறுத்தம் பிப்.2–ம் தேதி வரை நீட்டிப்பு!

சென்னை, டிச.29

தைப்பூச விழாவையொட்டி, மேல்மருவத்தூரில் 28 விரைவு ரெயில்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக நிறுத்தம், பிப்.2–ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேல்மருவத்தூரில் உள்ள ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் தைப்பூச விழா சிறப்பாக நடத்தப்படுகிறது.

இதையொட்டி, தமிழகம் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் மேல்மருவத்தூருக்கு வருவார்கள். அவர்களின் வசதிக்காக, மேல்மருவத்தூர் வழியாக இயக்கப்படும் விரைவு ரெயில்கள், தற்காலிகமாக அந்த நிலையத்தில் நின்று செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, லோக்மானிய திலக்– காரைக்கால், எழும்பூர்– மதுரை பாண்டியன், கன்னியாகுமரி– நிஜாமுதீன், மதுரை– நிஜாமுதீன், எழும்பூர்– திருச்சி மலைக்கோட்டை, எழும்பூர்– செங்கோட்டை பொதிகை, எழும்பூர்– கொல்லம், எழும்பூர்– நாகர்கோவில், எழும்பூர்– மன்னார்குடி, தாம்பரம்– ராமேசுவரம், எழும்பூர்– உழவன், தாம்பரம்– செங்கோட்டை சிலம்பு, எழும்பூர்– சேலம் உட்பட 28 விரைவு ரெயில்கள் இருமார்க்கத்திலும் மேல்மருவத்தூரில் ஒரு நிமிடம் நின்று செல்லும்.

இந்த 28 விரைவு ரெயில்களுக்கும் பிப்.2–ம் தேதி வரை மேல்மருவத்தூரில் தற்காலிக நிறுத்தம் நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது என தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.



கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வந்த திராவிடர் கழக தலைவர் கி.வீரமணியை கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் காங்கிரஸ் தலைவரும், பொதுக்குழு உறுப்பினருமான எல்.சுப்பிரமணியன் சந்தித்து கே.ஆர்.பி.அணை முன்பு காமராஜர் சிலை வைக்க வலியுறுத்தி கோரிக்கை மனு அளித்தார்.



சிவகங்கை அருகே மானாகுடியில் வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி நடந்தது.

### ஊட்டி அருகே

# தோடர் பழங்குடியின மக்களின் 'மொற்பர்த்' புத்தாண்டு பண்டிகை கோலாகலம்!

ஊட்டி, டிச. 29–

நீலகிரி மாவட்டத்தில் தோடர், கோத்தர், காட்டு நாயக்கர், பனியர், இருளர், குறும்பர் இன பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் தங்கள் உடை, உணவு முறை, வழிபாட்டு முறை, திருமணம், இறப்பு என தங்களின் அனைத்து வாழ்வியல் நிலையிலும், தங்கள் முன்னோர் விட்டுச் சென்ற பாரம்பரியத்தை பின்பற்றுகின்றனர்.

தோடரினமக்கள்ஊட்டி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில், தங்களுடைய மந்துகளில் வசிக்கின்றனர்.

இங்கு 'மொற்பர்த்' என்ற புத்தாண்டுப் பண்டிகை ஆண்டுதோறும் டிசம்பர்இறுதியிலோஅல்லது ஜனவரி முதல் வாரத்திலோ கொண்டாடப்படுவது வழக்கம்.

நடப்பாண்டு 'மொற்பர்த்' பண்டிகை, தோடரின மக்கள் வசிக்கும் மந்துகளின் தலைமை மந்தான தலைகுந்தா அருகேயுள்ள முத்தநாடு மந்தில் நேற்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதில், நீலகிரி மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பெரும்பாலான தோடரின மக்கள் கலந்து கொண்டு, முத்தநாடு மந்தில் உள்ள பழமை வாய்ந்த 'மூன் போ' மற்றும் 'அடையாள் ஒவ்' கோயில்களில் சிறப்பு வழிபாடு நடத்தினர்.

கோயில் வளாகத்துக்குள் செல்ல ஆண்களுக்கு மட்டுமே அனுமதி உள்ளதால், தோடரின ஆண்கள் தங்கள் பாரம்பரிய உடையணிந்து மண்டியிட்டு வழிபாடு நடத்தினர். ஆண்கள் வழிபாடு நடத்தி முடிந்ததும், பெண்கள் கொண்டாட்டத்தில் இணைந்தனர். பின், தங்கள் பாரம்பரிய பாடல்களை பாடியபடி நடனமாடினர்.

இவர்களைதொடர்ந்து ஆண்கள் நடனமாடினர். பின்னர், இளைஞர்கள் இளவட்டக் கற்களை தூக்கி தங்கள் இளமையை நிரூபித்தனர். பின்னர், அனைவருக்கும் பிரத்யேக உணவு வழங்கப்பட்டது. விழாவில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என். எஸ் .நிஷா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். தோடரின மக்கள் தலைவர் மந்தேஸ் குட்டன், அடையாள்குட்டன், பீட்ராஜ், நார்தே குட்டன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



### கடும் வரி எதிரொலி:

# சிகரெட் விலை ரூ.72 வரை உயர்கிறது!

புதுடெல்லி, டிச.29–

மத்திய அரசு கொண்டு வந்துள்ள புதிய கலால் வரி சட்டத்திருத்தத்தால் சிகரெட் மற்றும் புகையிலைப் பொருள்களின் விலை வரலாறு காணாத வகையில் உயரவுள்ளது. இதன் விளைவாக, தற்போது ரூ.18க்கு விற்பனை செய்யப்படும் ஒரு சிகரெட்டின் விலை ரூ.72 வரை உயர வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

கடந்த டிச.1 முதல் 19–ஆம் தேதி வரைநடைபெற்ற நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில், புகையிலைப் பொருள்களுக்கான வரி விதிப்பில் மாற்றங்களைக் கோரும் மசோதா தாக்கல் செய்யப்பட்டது. சிகரெட், ஹுக்கா, ஜர்தா போன்ற புகையிலை பொருள்களுக்கு கூடுதல் கலால் வரி விதிக்க வழிவகை செய்யும் இந்த மசோதா, இரு அவைகளிலும் விவாதிக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

தற்போது சிரெட்டுகளில் நீளம் மற்றும் அதன் வகையை அடிப்படையாகக் கொண்டு 1,000 சிகரெட்டுகளுக்கு ரூ.200 முதல் ரூ.735 வரை வரி வசூலிக்கப்படுகிறது. ஆனாலும், புதிய சட்டத்திருத்தத்தின் மூலம் இந்தத் தொகை ரூ.2,700 முதுல் ரூ.11,00 வரை பலமடங்கு உயர்த்தப்பட உள்ளது.

புகையிலைக்கான வரி 25 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாக உயர்த்தப்படம். ஹுக்காவிற்கான னரி 25 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக அதிகரிக்கப்படும். அதிகபட்சமாக, புகையிலைச் சேர்மானங்களுக்கான வரி 60 சதவீதத்திலிருந்து 300 சதவீதமாக 5 மடங்கு உயர்த்தப்படும்.

இந்த விலை உயர்வு குறித்த செய்தி வெளியானதும், சமூக ஊடகங்களில் பெரும் விவாதம் எழுந்தது. 'சிகரெட் விலை கணிசமாக உயர்வதால், சாதாரண மக்கள் இதனை வாங்குவது குறையும். இது புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கட்டுப்படுத்தி, ஆரோக்கியமான சமுதாயததை உருவாக்க உதவும்' என்று ஒரு தரப்பினர் இதனை வரவேற்றனர்.

அதேநேரம், 'விலை அதிகரிப்பதாலேயே ஒருவரது புகைப்பழக்கத்தை மாற்றிவிட முடியாது. மாறா, இது சட்டவிரோத கடத்தல் மற்றும் தரமற்ற உள்ளூர் புகையிலை பொருள்களின் புழக்கத்தை அதிகரிக்கக் கூடும்' எனமற்றொருதரப்பினர்அச்சம்தெரிவித்தனர்.

# உத்தரப் பிரதேசத்தில் 2.89 கோடி வாக்காளர்கள் நீக்கம்!

லக்னோ, டிச. 29–

உத்தர பிரதேசத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை (எஸ்.ஐ.ஆர்.) தொடர்ந்து, 2.89 கோடி வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி நவதீப் ரின்வா, பி.டி.ஐ. செய்தி தெரிவித்ததாவது:–

கடந்த நவ. 4ஆம் தேதி முதல் உத்தர பிரதேசத்தில் எஸ்.ஐ.ஆர். பணிகள் நடைபெற்றன. இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கான காலம் இரண்டு முறை நீட்டிக்கப்பட்டு டிச. 26–ஆம் தேதி நிறைவடைந்தது.

இதைத் தொடர்ந்து, வரும் டிச. 31–ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. அந்தப் பட்டியலில் 12.50 கோடி வாக்காளர்கள் இடம்பெற வாய்ப்புள்ளது. அவர்களில் ஒரு கோடிக்கும் அதிகமானவர்களுக்கு மத்திய, மாநில அரசுகளால் வழங்கப்பட்ட ஏதேனும் ஓர் அடையாள அட்டை, பிறப்பிடச் சான்றிதழ், ஜாதிச் சான்றிதழ் உள்பட தேர்தல் ஆணையம் பரிந்துரைத்துள்ள 12 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பிக்குமாறு நோட்டீஸ் அனுப்பப்பட உள்ளது. அவர்களைப் பற்றிய விவரங்களைச் சரிபார்த்து உறுதி செய்ய இந்த நோட்டீஸ் அனுப்பப்படும்.

அதேவேளையில் இருப்பிடம் மாறியது, ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டுள்ளது, வாக்காளரின் மரணம் போன்ற காரணங்களால் தற்போது 2,88,75,000 வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதில் கண்டுபிடிக்க முடியாத வாக்காளர்களின் பெயர்களும், எஸ்.ஐ.ஆர். படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்காத 8 லட்சத்துக்கும் குறைவானவர்களின் பெயர்களும் அடங்கும்.

பெரும்பாலும் லக்னௌ, காஜியாபாத், பிரயாக்ராஜ், கான்பூர் போன்ற பெரிய நகர்ப்புற பகுதிகளில் இருந்து வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

18.70% பேர் நீக்கம்

எஸ்.ஐ.ஆருக்கு முந்தைய வாக்காளர் பட்டியலில் மொத்தம் 15.44 கோடி வாக்காளர்கள் இடம்பெற்றனர். அவா்களில் சுமார் 18.70 சதவீதம் பேர் (2,88,75,000) தற்போது நீக்கப்ப ட்டுள்ளனர். ஜன.1 முதல் வாக்காளர் பட்டியலில் பெயர் சோ்ப்பதற்கான படிவம் 6ஐ சமர்ப்பித்து, அவர்கள் பெயரைச் சேர்க்க விண்ணப்பிக்கலாம். நோட்டீஸ் அனுப்பப்பட உள்ள ஒரு கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் ஆவணங்களை சமா்ப்பிக்காவிட்டால், அவர்களின் பெயரும் இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படாது என்று தெரிவித்தார்.

நாட்டில் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமாக உள்ள உத்தர பிரதேசம், மத்தியில் எந்தக் கட்சி ஆட்சி அமைக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. அந்த மாநிலத்தில் 2.89 கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### எவனோ எழுதித் தரும் அறிக்கையை வெளியிட்டு

# தான் ஒரு தற்குறி என்பதை மீண்டும் மீண்டும் நிரூபிக்காதே!

## விஜய்க்கு கவிஞர் காசி முத்து மாணிக்கம் கண்டனம்!!



சென்னை, டிச.28

எவனோ எழுதித் தரும் அறிக்கையை வெளியிட்டு தான் ஒரு தற்குறி என்பதை மீண்டும் மீண்டும் நிரூபிக்காதே என்று த.வெ.க. தலைவர் விஜய்க்கு தி.மு.க. வர்த்தக அணி செயலாளர் காசி முத்து மாணிக்கம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது:–

குறைந்தபட்ச செயல்திட்டம் என்றெல்லாம் மக்களை குழப்பி வந்த திமுக என்று தற்குறி நடிகர் விஜய் பேசி இருக்கிறார்.

பா.ஜ.க.வில் இன்று இருப்பவர்களை விட அன்று தளகர்த்தாக்களாக இருந்த அத்வானி, முரளி மனோகர்ஜோஷி, மாயாவதி என பெரிய ஆர்.எஸ்.எஸ் பட்டாளமே இருந்தது. இருந்தபோதிலும், தி.மு.க.வின் தோழமைக்காக வாஜ்பாய் அரசு மதநல்லிணக்க அரசாக திகழ்ந்தது. தி.மு.க. அல்லாத பா.ஜ.க. காஷ்மீர் சிறப்பு அந்தஸ்தை காலி செய்தது. சி.ஏ.ஏ. சட்டதிருத்தம் தந்தது. பாபர் மசூதியை இடித்து தரைமாட்டமாக்கி ராமர் கோவில் ஆக்கியது.

வக்ப்போர்டில் இஸ்லாம் அல்லாதவர்களும் இருக்கலாம் என திருத்தம் தந்து. முத்தலாக்கை சட்டரீதியாக எடுத்தது. பொதுசிவில் சட்டத்தை அமல்படுத்துவது என பல குழப்பங்கள் தி.மு.க. இல்லாத பா.ஜ.க. அரசு நடத்தி காட்டி வருகிறது.இதே குறைந்த பட்ச செயல்திட்டத்தை சந்திபாபு நாயுடுவும், நிதீஷ்குமாரும் கேட்டிருந்தால், தி.மு.க. காலம்போல் மதநல்லிணக்க நாடாக இந்திய உருவாகியிருக்கும்.

கரூர் நிகழ்வுக்கு பிறகு ஆதவ் அர்ஜுனா ஒன்றிய அரசின் காவிகளோடு விமானத்தில் பயணம் செய்தபோது கொண்டை தெரிந்தது.

கரூர் நிகழ்ச்சிக்கு பின் உங்களின் ஓட்டத்தை பார்த்து நாடே உங்களுக்கு அறிவுரை சொன்னபோது, சங்கி கூட்டம் மட்டும் ஆதரித்து (பழனிச்சாமியும் காவிதானே) பேசியபோது, கொண்டை வெளியே தெரிந்தது.

கிறிஸ்துவ ஆலயங்கள் வடமாநிலங்களில் பாதிக்கப்பட்டதை கண்டித்து தளபதி அறிக்கை விடும்போது, அமைதிகாத்தபோது விஜயின் கொண்டை தெரிந்தது.

தன் கவிதைகள் தமிழில் வந்தபோது, அந்த புத்தகத்தின் வெற்றியை பேரறிஞர் அண்ணாவுக்கு காணிக்கையாக்குகிறேன் எனச் சொன்ன அடல்பிகாரி வாஜ்பாயுடன் உறவில் இருந்தோம்.

பா.ஜ.க.வை தி.மு.க. தான் தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்தது என அணில் கூட்டம் சொல்கிறது.

தமிழ்நாட்டில் அதுவரை பத்மநாதபுரம் சட்டமன்ற உறுப்பினராக மட்டும் இருந்த பா.ஜ.க.வை தமிழகத்திலிருந்து மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் உருவாகும் அளவு சங்கிகளை வளர்த்துவிட்டவர் ஜெயலலிதா.

உங்களை ஏன் சங்கீகளின் அடிமை என்கிறோம் என்றால் எங்கே கொண்டை தெரிந்தது என்றால் தமிழகத்தில் ஏன் கொள்கை எதிரி பா.ஜ.க.வைதிட்டவில்லை என்றீர்கள். ஆனால் பா.ஜ.க. ஆளும் பாண்டிச்சேரியில் பா.ஜ.க. அமைச்சர்களையோ, பா.ஜ.க. கூட்டணி முதல்வரையோ தாக்காதபோது கொண்டை தெரிந்தது.

திருப்பரங்குன்றத்தில் நாங்கள் நீதிபதியோட முரண்பட்டு மதநல்லிணக்கம் காக்க வரும்போது, த.வெ.க. போராடவேண்டாம். குறைந்தபட்சம் கருத்துகூட கூறாதபோது கொண்டை வெளியே தெரிந்தது.

தேசத்தந்தை மகாத்மா காந்தியின் பெயரை எடுத்ததை அ.தி.மு.க. ஜெய்குமார் கூட கண்டித்தபோது, நீங்கள் மூடியது வாய். எங்களுக்கு தெரிந்தது உங்கள் கொண்டை.

உன் வீட்டு முன்பு ஒரு நாள் முழுவதும் தனது ஆதரவாளர்களுடன் அமர்ந்த சகோதரி அஜிதா ஆக்னலினை ஒரு வார்ததை கூட விசாரிக்காது துரத்தி அடித்த நீங்கள் கருணையின் வடிவமா? அந்த சகோதரி உயிருக்கு மருத்துவமனையில் போராடிக்கொண்டிருக்கிறது.

உங்கள் அரவணைப்பில் சகோதரியாக இருந்த பெண் த.வெ.க. மாவட்டசெயலாளரால் அசிங்கப்பட்டாரே, அந்த பெண்ணை சந்தித்தீர்களா?

நீங்கள் நடித்த 69 படங்களில் 51 படங்கள் தோல்வி அடைந்தன. ரசிகன், தேவா, ராஜாவின் பார்வையிலே, மாண்புமிகு மாணவன், லவ் டுடே, ஒன்ஸ்மோர், நெஞ்சினிலே, என்றென்றும் காதல், யூத், புதிய கீதை, உதயா, சச்சின், குருவி, மொர்சல், தலைவா என தோல்வி கண்டாலும் 500 கோடி சம்பளம் வாங்கும் நீ, இந்த தயாரிப்பாளர்களுக்கு இன்றுவரை உதவியது உண்டா?புலியை பார்த்து, பூனை சூடு போட்ட கதையாக தளபதி, இளைய தளபதி என அலையாதே, கடந்த கால அரசியல் தெரியாது, எவனோ எழுதிதரும், அறிக்கையை வெளியிட்டு தான் ஒரு தற்குறி என்பதை மீண்டும் மீண்டும் நிரூபிக்காதே.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.




கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் முன்னேற்றம் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ராகுல்நாத் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட கலெக்டர் பவன்குமார் கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையாளர் சிவகுருபிரபாகரன் உட்பட பலர் உள்ளனர்.

### ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டம்:

# அத்துமீறும் நபர்களை காவல்துறை கட்டுப்படுத்த வேண்டும்!

## இந்து முன்னணி கோரிக்கை!!



கோவை, டிச.29—

இந்துமுன்னணி மாநிலத்தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் கிறிஸ்துமஸ்தினத்தன்றுசென்னை, காஞ்சிபுரம், இராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் உள்ளிட்ட பல இடங்களில் நடு இரவில் போக்குவரத்துக்கு இடையூறாகவும் பொது மக்களை அச்சுறுத்தும் வகையிலும் இரவு முழுவதும் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாகச் சென்றுள்ளனர். இரவு முழுவதும் வெடிகளை பொது இடத்தில் வெடித்தும் தொந்தரவு செய்தனர். அத்துமீறி அநாகரிகமாக நடந்தவர்கள் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை. வாழ்த்து கூறுகிறோம் என்று மக்களிடம் அநாகரிகமாக நடந்த சம்பவங்கள் சமூகஊடகங்களில்வெளி வந்துள்ளன.

ஆனால் இந்துக்களின் திருவிழாவான தீபாவளிக்கு வெடி வெடிப்பதில் கட்டுப்பாடு விதிப்பது. திருவிழாவில் நேரகட்டுப்பாடு உட்பட பல்வேறு கட்டுப்பாடுகளைவிதித்து தமிழக அரசு இந்துக்களுக்கு விரோதமாகநடந்து கொள்கிறது.

இந்நிலையில் வருகின்ற ஆங்கில புத்தாண்டில் கொண்டாட்டம் என்ற பெயரில் இரவு முழுவதும் இரு சக்கர வாகனத்தில் பைக் ரேஸ் நடத்துவதை தடுக்க கண்காணிப்பைஅதிகப்படுத்த வேண்டும். இரவு நேர அநாகரிகமான ஆபாச நடனங்களை தடை செய்ய வேண்டும். நள்ளிரவில் மது அருந்தி பட்டாசு வெடித்து ஹேப்பி நியூ இயர் என அநாகரிகமாக தொந்தரவு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்க வேண்டும்.

இந்து ஆலயங்கள் மற்றும் இந்துக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகள் மற்றும் பொதுமக்கள் அமைதியாக ஒய்வெடுக்கும் நேரத்தில் கூச்சலிட்டு கத்துவதால் தேவையற்ற சச்சரவுகள் ஏற்படும் .

எனவே ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு கட்டுப்பாடுகளை அறிவிக்க வேண்டும். போதை ஆசாமிகள் மற்றும் போதை பொருள் நடமாட்டத்தை கண்காணித்து கட்டுப்படுத்த, தீவிர நடவடிக்கை எடுக்க காவல்துறை ரோந்து வாகனத்தை அதிகப்படுத்த வேண்டும். தமிழகத்தில் அசம்பாவிதம் நடக்காமல் கட்டுப்படுத்த வேண்டியது அரசின் கடமை என்பதை இந்து முன்னணி சார்பில் வலியுறுத்தி கூறுகிறோம் என்று அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஈரோட்டிற்கு நாளை உதயநிதி ஸ்டாலின் வருகை!

## அமைச்சர் முத்துசாமி அறிக்கை!!

ஈரோடு,டிசம்29—

தமிழ்நாடு துணை முதலமைச்ரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் நாளை ஈரோடு மாவட்டத்திற்கு வந்து நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.அதற்காக அவர் நாளை மதியம் 12 மணியளவில் சித்தோடு ஈரோடு அரசு பொறியியல் கல்லூரிக்கு வருகை தர உள்ளார்கள்.எனவே இந்த நிகழ்ச்சியில் ஈரோடு தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய பகுதி, பேரூர் வார்டு ,கிளைக் கழகம் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் சிறப்பு அழைப்பாளர்கள்,உள்ளாட்சிப் பிரதிநிதிகள்,கழகத் தோழர்களும் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அமைச்சர் முத்துசாமிதனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# இந்தியா கூட்டணி உடைந்து விடும் என்ற நயினார் நாகேந்திரன் கனவு பலிக்காது!

## கனிமொழி எம்.பி. பேட்டி!!

தாம்பரம், டிச. 29

இந்தியா கூட்டணி உடைந்து விடும் என்று நயினார் நாகேந்திரன் கனவு கண்டு இருக்கிறார். அவர் கனவு கண்டு கொண்டே இருக்கட்டும். ஆனால் நிச்சயமாக, தமிழ்நாட்டில் பாஜகவுக்கு இடம் இல்லைஎன கனிமொழி எம்பி கூறியுள்ளார்

திமுக துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி., இன்று காலை விமானத்தில், சென்னையில் இருந்து கோவை புறப்பட்டு சென்றார். அப்போது கனிமொழி எம்பி, சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது,; "திமுக தேர்தலுக்கு மட்டும் மக்களை சந்திக்கும் கட்சி அல்ல. முதல மைச்சரிலிருந்து, திமுகவில் உள்ள அனைத்து தலைவர்களும், தொடர்ந்து கூட்டங்களை நடத்திக் கொண்டு வரும் இயக்கம் தான் திமுக. தேர்தல் நேரத்தில் எல்லா இயக்கங்களும், மாநாடுகள் நடத்துவது வழக்கம். ஆனால் இதற்கு முன்னதாகவே, மகளிர்களை, இளைஞர்களை சந்திக்கும் கூட்டங்களை, திமுக தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் இருக்கிறது. இந்தியா கூட்டணி உடைந்து விடும் என்று நயினார் நாகேந்திரன் ஆசைப்படுவதற்கு எல்லாம், நான் பதில் கூற முடியாது. அவர் இந்தியா கூட்டணி உடைந்து விடும் என்று கனவு கண்டு கொண்டு இருக்கிறார். அவர் கனவு காண்பது தப்பு அல்ல. அவர் கனவு கண்டு கொண்டே இருக்கட்டும். ஆனால் நிச்சயமாக, தமிழ்நாட்டில் பாஜகவுக்கு இடம் இல்லை என்பதை நயினார் நாகேந்திரன்புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு கனிமொழி எம்பி கூறினார்.




சாதிய தீண்டாமைக்கு எதிராக தமிழ்நாடு அரசின் சட்ட நடவடிக்கையை வலியுறுத்தி, திராவிடர் விடுதலை கழகம் சார்பில் திராவிட விடுதலைக் கழகம் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் போராட்டம் கோவை கலெக்டர் முன்பு இன்று காலை நடைபெற்றது.

### கீழடியில்

# 11– ஆம் கட்ட அகழாய்வு ஆராய்ச்சிக்கு மத்திய அரசு அனுமதி!

சென்னை, டிச.29

சிவகங்கை மாவட்டம் கீழடியில் அகழாய்வு ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை அங்கு 10 கட்டங்களில் அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இந்நிலையில் 10–ஆம் கட்ட அகழாய்வு குறித்த அறிக்கையை மத்திய அரசிடம் தமிழ்நாடு தொல்லியல் துறை சமர்ப்பித்தது.

அதைத் தொடர்ந்து 11–ஆம் கட்ட அகழாய்விற்கு அனுமதி வழங்கியுள்ளது. கீழடியில் இதுவரை 4 சதவீதத்திற்கும் குறைவான பரப்பளவே ஆய்வு செய்யப்பட்டுள்ளது. 11–ஆம் கட்ட ஆய்வு மூலம் வைகை நதிக்கரை நாகரிகத்தின் எஞ்சிய ரகசியங்களை வெளிக்கொணரத் திட்டமிடப்பட்டுள்ளது.

கீழடி மட்டுமின்றி, அதனைச் சுற்றியுள்ள கொந்தகை, அகரம் மற்றும் மணலூர் ஆகிய பகுதிகளிலும் விரிவான ஆய்வுகள் தொடர வாய்ப்புள்ளது. இதுவரை நடைபெற்ற 10 கட்ட அகழாய்வுகளில் சுமார் 20,000க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், ஜனவரியில் திறந்தவெளி அருங்காட்சியகம் திறக்கப்பட்ட பிறகு பணிகள் தொடங்கப்படலாம் எனதகவல் வெளியாகியுள்ளது.

### டாஸ்மாக் பாரில் மதுபோதையில் தகராறு:

# காசாளர் மீது தாக்குதல்; கண்ணாடி உடைப்பு!

## இளைஞர் மீது வழக்கு!!

கோவை, டிச.29—

கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் உள்ள டாஸ்மாக் பாரில் மதுபோதையில் தகராறு செய்து காசாளரைதாக்கிகண்ணாடியை உடைத்த இளைஞர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த தர்மா (25) என்பவர், கடந்த 8 ஆண்டுகளாக கோவை ஆர்.எஸ்.புரம், டி.பி.ரோட்டில், உள்ள டாஸ்மாக் கடையில் காசாளராக பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில், கடந்த 24 ஆம் தேதி இரவு சுமார் 10 மணி அளவில், ஹரிஷ் என்கிற விக்னேஷ் என்பவர் மதுபோதையில் டாஸ்மாக் பாருக்கு வந்து, காசாளர் தர்மாவிடம் தகராறில் ஈடுபட்டார். பின்னர் ஆபாச வார்த்தைகளால் திட்டியதுடன், காசாளரை தாக்கியுள்ளார்.

இதில், தர்மாவுக்கு தலையில் ரத்தக்காயம் ஏற்பட்டது.

மேலும், அங்கு இருந்த கண்ணாடியையும் உடைத்துள்ளார்.

இதுகுறித்து தர்மா அளித்த புகாரின் பேரில், ஆர்.எஸ்.புரம் போலீசார் ஹரிஷ் என்கிற விக்னேஷ் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கிறிஸ்துமஸ், ஆங்கில புத்தாண்டு விழா!

கோவை,டிச.29—

கோவை கீரணத்தம் கிரி நகர் மற்றும் பெத்தேல் நகர் உரிமையாளர் நல சங்கம் சார்பில் கிறிஸ்துமஸ் மற்றும் ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு சிறப்பான விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன.இந்தநிகழ்ச்சியில் குடியிருப்பாளர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

விழாவின் முக்கிய அம்சமாக சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் பங்கேற்கும் வகையில் கிரிக்கெட், பேட்மிண்டன், வளையம் எறிதல், ஓட்டப் பந்தயம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் நடனம், பாடல் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்று பார்வையாளர்களை உற்சாகப்படுத்தின.விளையாட்டு போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகளில்வெற்றி பெற்றவர்களுக்கு சங்க நிர்வாகிகள் பரிசுகள் வழங்கி பாராட்டினர். இந்த நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் சுப்ரமணிதலைமைதாங்கினார். செயலாளர் ஜான்சன், துணைச் செயலாளர் சந்தியா, பொருளாளர் பிரகாஷ், துணை பொருளாளர் ரிமோலாசர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் செயற்குழு உறுப்பினர்கள் அரவிந்தன், பிஜோய் பாபு, ஜார்ஜ், சக்திவேல், கார்த்திகேயன், இனோக், தாமஸ், சுந்தர்ராஜ், ஹேமலதா, தேன்மொழி உள்ளிட்டோர் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தனர்.




### ஈரோட்டில்

# போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் 10 பேர் பணியிட மாற்றம்!

ஈரோடு,டிச.29—

ஈரோடு மாவட்டத்தில் 10 போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கோவை சரக்கத்தில் காத்திருப்போர் பட்டியலில் இருந்த இன்ஸ்பெக்டர் குமரேஷ் ஈரோடு மாவட்டம் ஆசனூர் போலீஸ் ஸ்டேஷனுக்கும், இன்ஸ்பெக்டர் சரவணன் கொடுமுடி போலீஸ் ஸ்டேஷனுக்கும், இன்ஸ்பெக்டர் இளங்கோ சத்தியமங்கலம் போலீஸ் ஸ்டேஷனுக்கும், இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி பெருந்துறை அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கும், இன்ஸ்பெக்டர் ஜெகநாதன் காஞ்சிக்கோயில் போலீஸ் ஸ்டேஷனுக்கும் பணியிடம் மாற்றம் செய்யப்பட்டனர்.இதேபோல் பெருந்துறை மகளிர் இன்ஸ்பெக்டராக பணியாற்றிய மகாலட்சுமி நீலகிரி மாவட்டம் மதுவிலக்கு பிரிவுக்கும் பவானி போக்குவரத்து இன்ஸ்பெக்டராக பணியாற்றிய சரவணா குமார் திருப்பூர் மாவட்டம் காங்கயம் போக்குவரத்து போலீஸ் ஸ்டேஷனுக்கும், அந்தியூர் போக்குவரத்து இன்ஸ்பெக்டராக பணியாற்றிய கஸ்தூரி பவானி போக்குவரத்து பிரிவுக்கும், கோபி போக்குவரத்து இன்ஸ்பெக்டராக பணியாற்றிய பதி கோவை மாவட்டஆயுதப்படைக்கும்,ஈரோடு ஆயுதப்படை இன்ஸ்பெக்டராக பணியாற்றிய பழனிச்சாமி கோபி போக்குவரத்து இன்ஸ்பெக்டராக பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். இதற்கான உத்தரவை கோவை சரக டிஐஜி சசிமோகன் பிறப்பித்துள்ளார்.


# விஷம் குடித்து மூதாட்டி சாவு!

கோவை,டிச.29—

கோவை சிங்காநல்லூர் விநாயகர் கோவில் தெருவைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் மனைவி பழனியம்மாள் (84) .இவர் இடுப்பு வலியால் அவதி பட்டு வந்தார். இதனால் வீட்டில் தனியாக இருந்தபோது ஸ்டெயின்ரிமூவர் அமிலத்தை குடித்து தற்கொலைக்கு முயன்றார்.

இதையடுத்து அவரை உடனடியாக உறவினர்கள் சிங்காநல்லூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் மேல்சிகிச்சைக்காக கோவை பீளமேடு பகுதியில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று பழனியம்மாள் உயிரிழந்தார்.

இது குறித்து அவரது மகன் நடராஜ் (54), சிங்காநல்லூர் போலீசில்புகார்அளித்தார்.புகாரின்பேரில்சிங்காநல்லூர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். உயிரிழந்த பழனியம்மாள் உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு, பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.இந்த சம்பவம் குறித்து சிங்காநல்லூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் எம்.பி. 61–வது பிறந்தநாளை முன்னிட்டு, கோவை மாநகர் தெற்கு மாவட்ட தமாகா சார்பில் பல்வேறு நிகழ்சிகள் நடத்தப்பட்டன.கோவை தண்டு மாரியம்மன் கோவிலில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு, தங்கத் தேர் இழுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

### ஊட்டி அருகே நள்ளிரவில்

# கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானையால் பரபரப்பு!

ஊட்டி, டிச.29—

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே உள்ளது நுந்தளா கிராமம் .இந்த கிராமத்தில் சுமார் 400 குடியிருப்புகள் உள்ள நிலையில் நேற்று நள்ளிரவு காட்டு யானை ஒன்று கிராமப் பகுதிக்குள் நடமாடு வது அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளது.




இதனைத் தொடர்ந்து வனத்துறைக்கு தகவல் அளித்த தன் பேரில் வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று காட்டு யானை நடமாட்டத்தை கண்கா ணித்து வருகின்றனர்.இந்தயானைகெத்தை வனப்பகுதியில் இருந்து சுமார் 50 கிலோமீட்டர் பயணம் மேற்கொண்டு நுந்தளா கிராமத்திற்குள் நுழைந்துள்ளது. அப்பகுதியில் அதிகளவு குடியிருப்புகள் இருப்பதால் யானை நடமாட்டத்தை கண்காணித்து அதனை விரட்டி அடர்ந்த வனப்பகுதிக்குள்விட வனத்துறையினர்திட்டமிட்டுள்ளனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

29.12.2025

# திருப்பரங்குன்றத்தில் அடுத்த ஆண்டு தீபம் ஏற்றுவோம்! நயினார் நாகேந்திரன் பேச்சு!!



**ஊட்டி,டிச.29—**

நீலகிரி மாவட்டம் ஊட்டி ஏடிசி பகுதியில் பாஜக சார்பில் பொதுக் கூட்டம் நடந்தது.

இந்த கூட்டத்தில் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், முன்னாள் தலைவர் அண்ணாமலை, அதிமுக மாவட்ட செயலாளர் கபப்ச்சி வினோத், கூடலூர் எம் எல் ஏ பொன்.ஜெயசீலன், முன்னாள் எம்பி கே.ஆர்.அர்ஜுனன் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியதாவது: ஊட்டி நகரத்தில் பேருந்து வசதிகள் இல்லை, போக்குவரத்து வசதிகள் இல்லை.

சுற்றுலா பயணிகள் அதிகம் வருகிறார்கள் அவர்கள் சரியான இடமும், பாதுகாப்பில்லை. குன்னூர் தொகுதியில் குடிநீர் சரியாக இல்லை. இங்கிருந்து பொன் ஜெயசீலன் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். அவரால் எதுவுமே செய்ய முடியவில்லை. காரணம் திமுக ஆட்சியில் எதையும் செய்ய முடியாமல் இங்கு இருந்து கொண்டிருக்கிறது. 356 என்று சொன்னால் இந்திய அரசியலமைப்பு அரசியல் சட்டப்படி ஒரு ஆட்சியை கலைப்பதற்கு பயன்படுத்தக்கூடிய சட்டப்பிரிவு. ஆனால் இந்த ஆட்சியை கலைக்க வேண்டிய அவசியம் நமக்கு இல்லை. காலம் கடந்துவிட்டது தேசிய ஜனநாயக கூட்டணி மிகப் பெரிய அளவில் உருவாகி வருகிறது. இந்த கூட்டணியை உருவாக்கியவர் நரேந்திர மோடி. வருகின்ற தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் தோல்வி அடையும். திமுக தோற்றுப் போய் விடுவார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்ற கூட்டம் தான் இன்று ஊட்டியில் கூடி இருக்கின்ற கூட்டம். ஏன் அந்த ஆட்சியை கலைக்கப்பட வேண்டும், ஏன் இந்த ஆட்சி அகற்றப்பட வேண்டும் யார் முதலமைச்சராக வர வேண்டும் என்பதை காட்டிலும் யார் இந்த நாட்டில் முதலமைச்சராக இருக்கக் கூடாது என்பது தான் இன்றைய மக்களினுடைய கேள்வியாக இருக்கிறது.

இந்த ஆட்சியால் ஒருவருக்கு லாபம். ஒரு குடும்பத்திற்கு லாபம்.

தற்போது திமுக 2026 ஆண்டு தேர்தலுக்காக தேர்தல் வாக்குறுதி பெற கனிமொழி தலைமையில் குழு அமைத்துள்ளனர். ஏற்கனவே 2021ம் ஆண்டு கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு விட்டதா?.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறாவிட்டாலும் 18 சதவீத வாக்குகளை பெற்றுள்ளது. கரூரில் நடிகர் விஜய் நடிகர் விஜய் கூட்டம் நடத்தியது கூட்டம் நடத்தும்போது டாஸ்மார்க் ஊழல் குறித்து படினார் பாட்டு பாடினார் அதை எதிர்த்து அதை செருப்பை வீசி மின்சாரத்தைத் துண்டித்து கலவரத்தை ஏற்படுத்தினர். தமிழக முதல்வர் இரண்டு கடனடியாக எவ்வாறாக வந்தார் திருவோடு இரவாக போஸ்ட்மார்ட்டம் எப்படி நடந்தது.

தமிழக முதல்வர் பேசும்போது இரும்பு கரம் கொண்டு அடக்கு வேன்னு சொல்றார். இரும்புகைதுருப்பிடித்து விட்டதா. தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 52% அதிகரித்துள்ளன. சொத்து வரி மின்சார கட்டணம் மற்றும் வரிகள் உயர்த்தப் பட்டுள்ளன இதனால் மக்கள் பாதிப்படைந்து வருகின்றனர். திருப்பரங்குன்றத்தில் 2026 ஆம் ஆண்டு தீபம் ஏற்றுவோம் திமுக ஆட்சியின் நாட்கள் எண்ணப் படுகின்றன.

இவ்வாறு அவர் பேசினார்.

# விஷம் குடித்து மூதாட்டி சாவு!

**கோவை,டிச.29—**

கோவை சிங்காநல்லூர் விநாயகர் கோவில் தெருவைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் மனைவி பழனியம்மாள் (84) .இவர் இடுப்பு வலியால் அவதி பட்டு வந்தார். இதனால் வீட்டில் தனியாக இருந்த போது ஸ்டெயின் ரிமூவர் அமிலத்தை குடித்து தற்கொலைக்கு முயன்றார்.

இதையடுத்து அவரை உடனடியாக உறவினர்கள் சிங்காநல்லூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் மேல்சிகிச்சைக்காக கோவை பீளமேடு பகுதியில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று பழனியம்மாள் உயிரிழந்தார்.

இது குறித்து அவரது மகன் நடராஜ் (54), சிங்காநல்லூர் போலீசில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் சிங்காநல்லூர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். உயிரிழந்த பழனியம்மாள் உடல் பிரேத பரிசோதனைக்குஅனுப்பப்பட்டு, பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த சம்பவம் குறித்து சிங்காநல்லூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வனத்துறை சார்பில் பறவைகள் கணக்கெடுப்பு!

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வனத்துறை சார்பில் 2 நாட்கள் பறவைகள் கணக்கெடுப்பு நடந்தது.

தமிழ்நாட்டில் ஈர நிலங்களில் உள்ள பறவைகளின் வகைகள் மற்றும் எண்ணிக்கையை அறிந்து கொள்ளும் வகையில் வனத்துறை சார்பில் ஒருங்கிணைந்த ஈர நில பறவைகள் கணக்கெடுப்பு நேற்று முன்தினம் மற்றும் நேற்று என 2 நாட்கள் நடந்தன.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஈர நிலங்களான ராமநாயக்கன் ஏரி, பாரூர் ஏரி, அக்காதங்கை ஏரி, தளி ஏரி, கே.ஆர்.பி. அணை, ஆவலப்பள்ளி அணை, பனை ஏரி, காவிரி ஆறு உள்ளிட்ட 25 நீர் நிலைகளில் நேற்று முன்தினமும், நேற்றும் காலை 6 மணி முதல் காலை 11 மணி வரை கணக்கெடுப்பு நடந்தது.

இதில் 50&க்கும் மேற்பட்ட வன அலுவலர்கள், வன பணியாளர்கள், 50&க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள், கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு பறவைகளை கணக்கெடுக்கும பணியில் ஈடுபட்டனர்.

இதில் ஒவ்வொரு நீர்நிலைகளிலும் பறவைகள குறித்து முன்அனுபவம் கொண்ட நிபுணர்கள் மூலமாக பறவை இனங்கள் கண்டறிந்து பதிவு செய்யப்பட்டன.

அவ்வாறு தொலைநோக்கு கருவி, கேமரா உள்ளிட்ட கருவிகளை பயன்படுத்தி கருநாரை, வெண் கழுத்து நாரை, கொண்டை பாம்புண்ணி கழுகு, சிறிய கரும் பருந்து, கொண்டை வல்லூறு, சிறிய பச்சை கொக்கு, சிறிய காட்டு ஆந்தை நத்தை குத்தி நாரை, செந்நாரை, மீன் கொத்திகள், மஞ்சள் மூக்கு நாரை உள்ளிட்ட பறவை இனங்கள் கண்டறியப்பட்டன.

ஓசூர் வன கோட்ட வன உயிரின காப்பாளர் பகான் ஜெகதீஷ் சுதாகர் தலைமையில் உதவி வன பாதுகாவலர் பசவ் சிங்க், மற்றும் தன்னார்வலர்கள் இதில் பங்கேற்றனர்.

இந்த பறவைகள் கணக்கெடுப்பு பணியில் கலந்து கொண்டவர்களுக்கு வனத்துறை சார்பில் சான்றிதழ்கள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் (29.12.2025)




திடீர் பணவரவு உண்டாகும். சமூகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். வெளிநாடு செல்லும் முயற்சி கைகூடும்.




உத்தியோகத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். பொருளாதார நிலை உயரும். நிலுவையில் உள்ள வேலைகள் முடியும்.




தொழில் வளர்ச்சி அபாரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள்.




இன்று அலைச்சல் அதிகமாக இருக்கும். கடன் சுமை குறித்து கவலைகள்வரலாம்.மற்றவர்களிடம் நிதானமாகப் பேசுங்கள்




சந்திராஷ்டமம் என்பதால் புதிய முயற்சிகளைத்தவிர்க்கவும்.வாகனப் பயணத்தில் கூடுதல் கவனம் தேவை. பொறுமை அவசியம்.




பேச்சாற்றலால் காரியங்களைச் சாதிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும்.




பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். புதிய பொருட்கள் வாங்கும் யோகம் உண்டு. பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.




துணிச்சலான முடிவுகளை எடுப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை சேரும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.




உறவினர்களுடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். வீட்டைப் பராமரிக்கும் பணிகளை மேற்கொள்வீர்கள். மனநிம்மதி கிடைக்கும்.




வருங்காலம் குறித்த திட்டங்களை வகுப்பீர்கள்.தந்தையின்உடல்நலம் சீராகும். தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.




முயற்சிகளில் வெற்றி கிட்டும். தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது. நிதானமாகச் செயல்படவும்.




புதிய பொறுப்புகள் தேடி வரும். உயர் பதவியில் உள்ளவர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் சுப செய்திகள் வரும்.

# ஊத்தங்கரை அ.தி.மு.க. மத்திய ஒன்றிய செயலாளர் மாரடைப்பால் மரணம்!

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அதிமுக மத்திய ஒன்றிய கழக செயலாளராக இருந்து வந்தவர் பி, சாமிநாதன்(50) தீவிரக் கட்சிப் பணியாற்றி வந்தவர், நேற்று மாலை ஊத்தங்கரை மற்றும் சிங்காரப்பேட்டை மிட்டப்பள்ளி பகுதிகளில் அதிமுக கட்சியின் சுவர் விளம்பரங்கள் எழுதுவதை பார்த்துவிட்டு தனது சொந்த உப்பாரப்பட்டி ஊராட்சி சந்தகொட்டாவூர் கிராமத்தில் வீட்டுக்கு வந்தவர், இன்று அதிகாலை 1,30 மணியளவில் நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளதாக உறவினர்களிடம் கூறியுள்ளார், உடனடியாக அவரை ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு உறவினர்கள் மற்றும் கட்சிக்காரர்கள் அழைத்துச் சென்றுள்ளனர், அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்து விட்டதாக தெரிவித்தனர், இதனால் உறவினர்களும் அதிமுக பிரமுகர்கள் அதிர்ச்சி அடைந்தனர், இறந்த மத்திய ஒன்றிய அதிமுக செயலாளர் சாமிநாதன் உடல் அவரது சொந்த கிராமமான அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது ,அவருக்கு அதிமுக துணை பொது செயலாளர், வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் கேபி முனுசாமி நேரில் அஞ்சலி செலுத்தினார், அப்பொழுது அவருடன்,கிருஷ்ணகிரி கிழக்குமாவட்டசெயலாளரும்கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினருமான அசோக்குமார், ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் டி எம் தமிழ்ச்செல்வம், மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் கேபி,எம்,சதீஷ்குமார், மற்றும் கட்சியின் ஒன்றிய கழக செயலாளர்கள் வேடி,வேங்கன்,சர்க்கரை,நரேஷ், மாவட்ட துணை செயலாளர் சாகுல் அமீத், நகர செயலாளர் சிக்னல் ஆறுமுகம், முன்னாள் ஒன்றிய செயலாளர் தேவேந்திரன், மற்றும் பல்வேறு அணியை சேர்ந்த மாவட்ட, மாநில நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர், இவர் அதிமுக கட்சியில் பணியாற்றிய காலங்களில் ஊத்தங்கரை சுற்றுவட்டார பகுதியில் பல்வேறு கிராமங்களில் இருந்து மாற்று கட்சியினரை அதிமுகவில் இணைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது,

# 'வாவ்.. வாவ்.. வாவ்'..அந்த நட்சத்திர ஹீரோ படத்தை பாராட்டிய நடிகை சோபிதா



தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகரான நாகார்ஜுனாவின் மகன் நாகசைதன்யாவுக்கும், நடிகை சோபிதா துலிபாலாவுக்கும் கடந்த ஆண்டு திருமணம் நடந்தது. திருமணத்துக்கு பிறகு இருவருமே தற்போது பிசியாக சினிமாவில் நடித்து கொண்டிருக்கின்றனர்.

சினிமா படப்பிடிப்பு போக, சமூக வலைதளங்களில் அடிக்கடி ரசிகர்களுடன் கலந்துரையாடுவதை சோபிதா துலிபாலா வழக்கமாக கொண்டிருக்கிறார். அவ்வப்போது கலக்கலான புகைப்படங்களையும் வெளியிட்டு ரசிகர்களை குஷிப்படுத்தி வருகிறார்.

சமூக ஊடகங்களில் தீவிரமாக இருக்கும் சோபிதா, சமீபத்தில் இன்ஸ்டாகிராம் ஸ்டோரிஸில் ஒரு சுவாரஸ்யமான பதிவை வெளியிட்டார். கடந்த சில நாட்களாக இந்திய பாக்ஸ் ஆபீஸை அதிரவைத்து வரும் துரந்தர் படத்தைப் பாராட்டினார். 'வாவ்.. வாவ்.. வாவ்.. என்று பதிவிட்டார்.

தற்போது, சோபிதாவின் இன்ஸ்டாகிராம் ஸ்டோரி வைரலாகி வருகிறது. அதைப் பார்த்த நெட்டிசன்கள் பலவிதமாக கருத்துகளை பகிர்ந்து வருகின்றனர்.

இதற்கிடையில், துரந்தர் திரைப்படம் ஏற்கனவே ரூ. 1,000 கோடிக்கு மேல் வசூலித்துள்ளது. இதன் மூலம், இந்த ஆண்டின் அதிக வசூல் செய்த இந்திய திரைப்படம் என்ற சாதனையைப் படைத்துள்ளது.

# தொடர் தோல்விகளுக்குப் பிறகு...'சர்வம் மாயா' மூலம் கம்பேக் கொடுத்த நிவின் பாலி




மலையாள நடிகர் நிவின் பாலி கடந்த சில வருடங்களாக பல தோல்விகளைச் சந்தித்தார். இருப்பினும், நிவின் பாலி இப்போது அகில் சத்யன் இயக்கிய 'சர்வம் மாயா' என்ற திகில் நகைச்சுவை படத்தின் மூலம் கம்பேக் கொடுத்துள்ளார்.

கடந்த 25ம் தேதி வெளியான 'சர்வம் மாயா' படம் மோகன்லாலின் 'விருஷபா' படத்துடன் பாக்ஸ் ஆபீஸில் மோதியது. இதில், நிவின் பாலி படம் ஆரம்பத்திலிருந்தே பந்தயத்தில் ஆதிக்கம் செலுத்தியது. மேலும், நல்ல விமர்சனங்களைப் பெற்றது. இப்படம் இதுவரை ரூ. 30 கோடி வசூலித்துள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இதில், ரியா ஷிபு, பிரீத்தி முகுந்தன், ஜனார்தனன், ரகுநாத் பலேரி மற்றும் அஜு வர்கீஸ் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். பயர்பிளை பிலிம்ஸ் மற்றும் அகில் சத்யன் பிலிம்ஸ் ஆகிய பதாகைகளின் கீழ் அஜய குமார் மற்றும் ராஜீவ் மேனன் ஆகியோர் தயாரித்த இப்படத்திற்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைத்துள்ளார்.

# 'வேர்ல்ட் ஆப் பராசக்தி' வைரலாகும் புது வீடியோ




சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'பராசக்தி'. டான் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தில் அதர்வா, ஸ்ரீலீலா, ரவி மோகன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். இந்தி திணிப்பை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள இப்படம், அடுத்த ஆண்டு பொங்கல் விடுமுறையை முன்னிட்டு ஜனவரி 10ஆம் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில், 'வேர்ல்ட் ஆப் பராசக்தி' என்ற தலைப்பில் ஒரு புது வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. இது இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.

# 2025க்கு நன்றி சொன்ன நடிகை பாக்யஸ்ரீ போர்ஸ்

பாக்யஸ்ரீ போர்ஸுக்கு 2025 ஆம் ஆண்டு மேடு பள்ளம் நிறைந்த ஆண்டாக அமைந்தது. 2024 ஆம் ஆண்டில் மிஸ்டர் பச்சன் மூலம் தெலுங்கில் அறிமுகமானாலும், 2025 ஆம் ஆண்டில் பல படங்களில் நடித்து, தென்னிந்திய சினிமாவில் மிகவும் பரபரப்பான நடிகைகளில் ஒருவராக திகழ்ந்தார். இந்த ஆண்டு அவரின் மூன்று படங்கள் வெளியாகின. கிங்டம், காந்தா மற்றும் ஆந்திரா கிங் தாலுகா .

இந்தப் படங்கள் எதுவும் பெரிய அளவில் பாக்ஸ் ஆபீஸில் வெற்றி பெறவில்லை என்றாலும், பாக்யஸ்ரீ தனது நடிப்பால் ரசிகர்களை கவர்ந்தார். 2026ம் ஆண்டில் மேலும் பல படங்களில் அவர் நடிக்க உள்ளநிலையில், 2025ம் ஆண்டுக்கு நன்றி கூறியுள்ளார்.

பாக்யஸ்ரீ தனது பதிவில், 2025 அன்பும் கற்றலும் நிறைந்த ஆண்டாக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். “2025க்கு நன்றி. அன்பு, சிரிப்பு மற்றும் கற்றல்கள் நிறைந்த ஒரு வருடம்! இதற்கெல்லாம் நன்றி” என்று பதிவிட்டுள்ளார்.

பாக்யஸ்ரீ போர்ஸ் தற்போது அகில் அக்கினேனிக்கு ஜோடியாக " லெனின் " படத்தில் நடித்து வருவதாக கூறப்படுகிறது. இது 2026 கோடையில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

# மகளிர் கிரிக்கெட்டை இன்னும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதே குறிக்கோள் இந்திய வீராங்கனை




இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடந்து முடிந்த 3 போட்டிகளில் வெற்றி பெற்று தொடரை இந்திய அணி கைப்பற்றியது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான 4வது டி20 போட்டி இன்று திருவானந்தபுரத்தில் நடைபெற உள்ளது.இந்த போட்டியில் வென்று வெற்றி பயணத்தை தொடர இந்தியா முயற்சிக்கும். அதேவேளை ஆறுதல் வெற்றி பெற இலங்கை அணி தீவிரம் காட்டும்.

இந்த நிலையில், மகளிர்கிரிக்கெட்டை இன்னும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதே குறிக்கோள் என இந்திய வீராங்கனை ரேணுகா சிங் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

'எனது செயல்பாடு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. பெரும்பாலும் என்னால் 4 விக்கெட்டுகள் தான் எடுக்க முடிகிறது. 5 விக்கெட் கைப்பற்றுவதற்கு நான் இன்னும் கடினமாக உழைக்க வேண்டியது அவசியம்

பந்து வீச்சில் நாங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறோம். வேகப்பந்து வீச்சாளர்களும், சுழற்பந்து வீச்சாளர்களும் நல்ல நிலையில் உள்ளோம். 20 ஓவர் உலகக் கோப்பை போட்டிக்காக சரியான அணி கலவையை கண்டறிய முயற்சிக்கிறோம். பெண்கள் கிரிக்கெட்டை இன்னும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதே எங்களது குறிக்கோள்' என்றார்.

# 6 வயதில் செஸ் தரவரிசையில் இடம்: சென்னை சிறுமி சாதனை



தமிழகத்தின் இளம் வீராங்கனையான சென்னையை சேர்ந்த 6 வயது செஸ் வீராங்கனை ரயானிகா சிவராம் சர்வதேச செஸ் தரவரிசையில் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

சர்வதேச செஸ் சம்மேளனத்தின் (பிடே) ரேட்டிங்கில் அவர் 9வது இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். மொத்தம் 1,429 புள்ளிகள் பெற்றுள்ளார். இதன் மூலம் 'பிடே' ரேட்டிங்கில் இடம் பிடித்த தமிழகத்தின் இளம் வீராங்கனை என்ற சிறப்பை ரயானிகா சிவராம் பெற்றுள்ளார்.

ரயானிகாவுக்கு பல்வேறு தரப்பினரும் தங்களது பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

# யு19 உலகக் கோப்பை தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு



16 அணிகள் பங்கேற்கும் யு19 ஆண்கள் கிரிக்கெட் உலகக் கோப்பை அடுத்த ஆண்டு ஜிம்பாப்வே மற்றும் நமீபியாவில் நடைபெற உள்ளது . இந்த நிலையில் , 2026 யு19 உலககோப்பை தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அணிக்கு ஆயுஷ் மாத்ரே கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணி:

ஆயுஷ் மத்ரே (கேப்டன்), விஹான் மல்ஹோத்ரா (துணை கேப்டன்), வைபவ் சூர்யவன்ஷி, ஆரோன் ஜார்ஜ், வேதாந்த் திரிவேதி, அபிக்யான் , ஹர்வன்ஷ் சிங் , ஆர். எஸ். அம்ப்ரிஷ், கனிஷ்க் சௌஹான், கிலன் ஏ. படேல், முகமது எனான், ஹெனில் படேல், டி. தீபேஷ், கிஷன் குமார் சிங், உத்தவ் மோகன்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kilpauk Garden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066